மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே கட்டப்படுகிற வீடுகளுக்காக 6 ஆயிரம் அல்ல, 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அங்கே இருக்கிற மெட்டீரியல்ஸ் காஸ்ட் அதிகமாக இருக்கிற காரணத்தால் 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகள் கட்டுகிற திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்திலுள்ள வினோபா ட்ரஸ்ட் என்ற அமைப்புக்கான ஜெர்மன் நிதியுதவி.

433—(* வினா எண் 19942) திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, கொங்கர்பாளையம் குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்தில் வினோபா ட்ரஸ்ட் என்ற அமைப்புக்கு ஜெர்மன் நிதி கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை? அது எந்தெந்த பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது?

(இ) எத்தனை ஆதி திராவிட மக்கள் பயன்பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்தில் வினோபா ட்ரஸ்ட் என்ற அமைப்பு இல்லை. இங்கு பூமிதான இயக்கத்துக்கு கிடைத்த 304.04 ஏக்கர் நிலத்தில் அரசு ஆர்ஜிதம் செய்த 56 ஏக்கர், சாலை வசதிக்கு 18 ஏக்கர் நிலம் போக மீதி நிலம் 230.04 ஏக்கர் நிலமில்லா ஏழைகளுக்கு வழங்கப்பட்டு இந்த நிலத்தை மேம்பாடு செய்ய மேயர் அறக்கட்டளை ஈடுபட்டுள்ளது. இந்த சர்வோதய ஸ்தாபனம் மேற்கு ஜெர்மனி அக்ரோ ஆக்ஷன் நிறுவனத்திலிருந்து பண உதவி பெறுகிறது.

(ஆ) மேயர் அறக்கட்டளை மொத்தம் 21.65 இலட்சங்கள் பெற்றுள்ளது. இப் பணம் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர சமுதாய கட்டடங்கள் கட்ட, ஏழை விவசாயிகளுக்கு விவசாய தளவாட சாமான்கள், உழவு மாடுகள் வாங்க போன்ற பணிகளுக்கு உபயோகிக்கிறது.

(இ) நிலம் பெற்றவர்களில் 17 பேர் மலை வாசிகளும், ஏனையோர் பின் தங்கியவகுப்பையும் சேர்ந்தவர்கள்.

1984 மார்ச் 24]

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, 21 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் அந்த நிலங்களை மேம்படுத்தி அந்த மக்களை மேம்படுத்துவதற்காக என்று கொடுக்கப்பட்ட தொகை. ஆனால் அதை சரிவரப் பயன்படுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசு விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த ஜெர்மன் ஸ்தாபனம் கொடுத்தது 21 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய். அந்தத் தொகை சரியாகப் பயன்படுத்தப் படவில்லை என்றால் அது உண்மையானால் விவரங்களை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, அந்த நிலங்களை மேம்படுத்தி அவர்களுக்குச் சொந்தமாக பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கையாகும். ஆகவே அந்த நிலங்களை அவர்களுக்கு மேம்படுத்தி சொந்தமாக்கி பட்டா கொடுக்க விரைவாக ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பூமிதான வாரியத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள நிலங்கள் உடனடியாக பட்டா செய்யப்படுவதில்லை. ஏனென்றால் வளமில்லாத நிலங்களைத் தான் நமக்கு தானமாகக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் வளமுள்ள நிலங்களாக மாற்றியதற்குப் பிறகு தான் அவைகளை எல்லாம் யோசிக்கலாம்.

ஈரோடு நகராட்சிப் பகுதியில் நடத்தப்படும் வாரச் சந்தை.

434—(*வினா எண் 21660) திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சி வாரச் சந்தையைத் தனியார் நடத்தி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனால் நகராட்சிக்கு வருமான இழப்பு ஏற்பட்டு வருவது உண்மையா ?

(இ) நகராட்சியே வாரச்சந்தையை நடத்தும் திட்டமுள்ளதா?